IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 49/2015
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பச்சையப்பன் | Caste | : | |
| Father Name | : | ஏழுமலை | Calling | : | |
| Village | : | காட்பாடி | Religion | : | |
| Town | : | காட்பாடி | Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2nd day of September, 2025.

Chief Examination:

நான் காட்பாடி சார் பதிவாளரின் உதவியாளராக பணி புரிகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்தது. 1988 ஆம் ஆண்டு 2169 ஆவண எண் கொண்ட அண்ணாமலை கவுண்டர் மகன் சுப்பிரமணி கவுண்டர் துரைசாமியுடைய மக்கள் முனுசாமி கவுண்டர் மற்றும் பலரிடமிருந்து பெற்ற கிரைய பத்திரம் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆவண எண்.10811/2014 A.சுப்பிரமணி கவுண்டர் என்கிற சுப்பிரமணியிடமிருந்து A துரைசாமி கவுண்டருடைய மகன் D.லட்சுமணன் என்பவர் கிரையம் பெற்ற பத்திரமானது சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சா.சா.ஆ.2 ல் விற்பனை செய்தவரின் பெயர் A.சுப்பிரமணி கவுண்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுப்பிரமணி கவுண்டர் @ சுப்பிரமணி என்பதற்கு ஏதேனும் சாட்சியம் கொடுக்கப்பட்டு இரண்டு பெயர்களும் ஒரே நபருடையதுதான் என்று கொடுக்கபட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் கையெழுத்து செய்துள்ளது சுப்பிரமணியம் என்றுதான் உள்ளது. 1988 பத்திரத்தின் படி சுப்பிரமணி என்பவர் தான் உரிமையாளர் என்று சொன்னால் பத்திரத்தின் படி அண்ணாமலை மகன் சுப்பிரமணி

என்று தான் உள்ளது. 2014 பத்திரத்தின் படி அண்ணாமலை மகன் சுப்பிரமணி கவுண்டர் விற்பனை செய்யவில்லை என்று சொன்னால் அண்ணாமலை மகன் A.சுப்பிரமணி கவுண்டர் என்கிற சுப்பிரமணியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 2014 பத்திரத்தின் படி சுப்பிரமணியம் கையெழுத்து செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேல் அதிகாரியான மாவட்ட பதிவாளர் அவர்கள் என்னுடைய அலுவலகத்திற்கு கொடுக்கப்பட்ட கடிதம் என்று சொன்னால் சரிதான். ஆனால் என்னுடைய அலுவலக நகல்களை பார்த்தால்தான் மேற்படி ஆவணமானது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆவண எண் 2169/1988 ல் உள்ள ஆவணத்தில் கிரையத்தின் வாங்கியவரின் கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரிதான்.

2. அந்த வருடத்தில் கிரையம் பெறுபவரின் கையொப்பம் பெறும் நடைமுறை இல்லை. மேற்படி விவரத்தை குறித்துதான் பி.வா.சா.ஆ 1ல் 8வது பக்கத்தில் கடைசி 2 வரையில் மாவட்ட பதிவாளர் அவர்கள் உத்தரவை பிறப்பித்துள்ளார் என்று சொன்னார் என்றால் கிரையதாரர் கையொப்பம் செய்யாத நிலையில் கிரையதாரரை குறித்து முடிவு செய்ய இயலாது என்று குறிப்பிட்டுள்ளார்.

3. நான் சம்மனில் குறிப்பிட்ட கிரையம் விற்பனை செய்தவர் மற்றும் கிரையம் பெற்றவரின் கைரேகை பதிவேடு அசலை கொண்டு வந்துள்ளேன். ஆவணத்தில் அடிப்படையில்தான் நான் சாட்சியம்

சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இரண்டு ஆவணங்களின் அடிப்படையில் யார் கிரையம் பெற்றவர் இவர்தான் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். ஆனால் ஆவணங்களின் அடிப்படையில் என்னால் சொல்ல முடியும். உண்மையான கிரையம் பெற்ற A.சுப்பிரமணி என்பவரை சாட்சியங்களை கொண்டுதான் நிரூபிக்க முடியுமே தவிர என் சாட்சியத்தை கொண்டு நிருபிக்க முடியாது என்று சொன்னால் சரிதான். மேற்படி சுப்பிரமணியம் என்பவரும் மற்றும் A.சுப்பிரமணி என்பவரும் ஒரே ஆள் தான் என்பதற்கு இந்த ஆவணத்தின் படி சாட்சியம் இல்லை. இளவர் நேரடியாக சொத்தை கிரையம் பெற முடியுமா என்றால் முடியாது காப்பாளரை வைத்துதான் கிரையம் பெற முடியும்.

<u>வாதி தரப்பில் மறு விசாரணை</u>

1. பி.வா.சா.ஆ 1ல் பதிவு ஆவணத்தில் அ.வ.எண் 24/2015 ல் லட்சுமணனுக்கு என முடிவு செய்துள்ள நிலையில் சொத்து உரிமை குறித்தும் பதிவு ஆவணத்தின் ரத்து செய்வது குறித்தும் உரிய நீதிமன்றத்தை நாடி பரிகாரம் தேடி கொள்ள அறிவிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI